# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 9 | குடியியற்கல்வி | நேரம் :- 2.00மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. சமூகத்தின் அடிப்படைப் பண்பாக அமைவது.
 1) சேர்ந்து வாழுதல் 2) கூட்டாக செயற்படல்
 3) விட்டுக்கொடுப்பு 4) நம்பிக்கை

02. சகல பிரஜைகளும் அச்சமின்றி, சந்தேகமின்றி வாழும் வாழ்க்கையை மேற்கொள்வதற்கு தேவையான மிக முக்கியமான அம்சம்.
 1) சமூக தேவை 2) பரபஸ்பர உறர்வு
 3) சமூக பாதுகாப்பு 4) சமூக உதவி

03. நீங்கள் எது செய்தாலும் நல்லவர்களாக திகழுங்கள் என்று கூறியவர்.
 1) காந்தி 2) விவேகானந்தர் 3) நேரு 4) ஆபிரகாம் இலிங்கன்

04. மனிதன் சமூக இயைபாக்கும் அமைப்பதற்கு அடிப்படைப் பயிற்சியை விழங்கு நிறுவனம்.
 1) பாடசாலை 2) குடும்பம் 3) சமூக நிறுவனம் 4) சமய நிறுவனம்.

05. அறிவு திறன், மனப்பாங்கு போன்றவற்றை வழங்கும் நிறுவனம்.
 1) ஆலயங்கள் 2) சன சமூக நிலையங்கள்
 3) பாடசாலைகள் 4) முன் பள்ளிகள்

06. சமூக நிறுவனங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுவது.
 1) ஆலயம் 2) பாடசாலை 3) பள்ளிவாசல் 4) சமய ஸ்தாபனம்

07. பன்சலையின் பிதா என அழைக்கப்படுபவர்.
 1) ஜயக்கொடி 2) பண்டார 3) திலக் 4) வாசனா

08. தற்கால சமூகம் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சனைகளில் ஒன்று.
 1) வன்முறை 2) போதைப் பொருள் 3) முரண்பாடு 4) பொருளாதார

09. சமூகத்தில் உள்ள அனைவரும் கீழ்படிய வேண்டிய அரசாங்கத்தினால் விதிக்கப்படும் தொகுதி
 1) யாப்பு 2) கட்டளைகள் 3) சட்டம் 4) உரிமைகள்

10. சிறுவர் துன்புறுத்தல் தேசிய சட்டத்தில் இவற்றுள் அடங்கும்
 1) குடியியல் சட்டம் 2) குற்றவியல் சட்டம்
 3) அரசியலமைப்புச் சட்டம் 4) சர்வதேச சட்டம்

11. சர்வதேச சட்டத்தினுள் உள்ளடக்கப்படுவது.
 1) காணாமல் போதல் 2) நஷ்ட ஈடு
 3) குடி உரவு கூடிய கல்வி 4) கடன்அறவிடல்

12. நீதிமன்றங்களின் மாவட்ட நீதிமன்றத்திற்கு அடுத்தபடியாக உள்ள நீதிமன்றம்.
 1) நீதவான் நீதிமன்றம் 2) மாகாண மேல் நீதிமன்றம்
 3) குடும்ப நீதிமன்றம் 4) உயர்நீதிமன்றம்



kalvi.lk

13. சட்டத்தை மதிக்கும் நேர்மையான சமூகம் ஒன்றை உருவாக்கும் என்ற வாசகம் எந்த நிறுவனத்திற்குரியது.

1) பொலீஸ்　　2) நீதிமன்றம்

3) இரசாயன பகுப்பாய்வு திணைக்களம்　　4) இலங்கை கடற்படை

14. இலங்கை மனித உரிமை ஆணைக்குழு உருவாகிய ஆண்டும் சட்டமும்.

1) 1988ம் ஆண்டு 72ம் இலக்க சட்டம்

2) 1998ம் ஆண்டு 60ம் இலக்க சட்டம்

3) 1996ம் ஆண்டு 21ம் இலக்க சட்டம்

4) 1981ம் ஆண்டு 1ம் இலக்க சட்டம்

15. பிணக்கொன்றை இணங்க சபைக்கு கொண்டு கொள்வதற்கான விமிமுறைகள் அல்லாதது.

1) பொலிஸ்மூலம்　　2) பெரியவர்கள் மூலம்

3) நீதிமன்றம் மூலம்　　4) தனிப்பட்டோர் சபையுடன் தொடர்புகொள்ளல்

16. மனிதன் தனது தேவைகளை இலகுவாக கொள்வதற்கான வழிமுறையாக அமைவது.

1) கல்வி அறிவு　　2) உதவிகள்　　3) தொழில்நுட்பம்　　4) பணஉதவி

17. விஞ்ஞானபூர்வ முறைகளைப் பின்பற்றி பிரச்சினைக்கு தீர்வைத் தேடுவது.

1) செய்முறை　　2) ஆய்வு　　3) ஆராட்சி　　4) விளைவு

18. தொழிநுட்ப விடயங்களை தெரிய வேண்டும் என்பதை வலியுறுத்தும் கருத்தாக அமைவது.

1) இலவச மண்ணில் இலவச ஊதியம்

2) புதுப்புது விடயங்களை அறியாதவர் உலகை அறியார்

3) நாட்டைச் சுற்றி தங்க வேலி

4) இலவச மனிதனஜன’இலவச ஊதியம்

19. நீண்டகாலம் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியாக கொள்ளப்படுவது.

1) வளப்பயன்பாடுகளை மட்டுப்படுத்தல்

2) வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தல்

3) வளங்களை மேலதிகமாக பயன்படுத்தல்

4) வளங்களை அதிகமாக பகிர்தல்

20. உற்பத்தி செய்யும் பொருட்களை நுகர்வெரிடம் கையளிக்கும் செயன்முறை.

1) நுகர்வு　　2) உற்பத்தி　　3) மிகை உற்பத்தி　　4) பங்கீடு

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

**எல்லா வினாக்கறிக்கும் விடை தருக.**

(01) 1) சமூகப் பாதகாப்பில் முக்கியம் பெறும் சமூக நிறுவனம் நான்கு தருக?

2) சமூகப் பாதுகாப்பிற்காக பாடசாலையால் ஆற்றப்படும் பணிகள் நான்கு தருக?

3) சமூகப் பாதுகாப்பை பேணுவதால் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக?

(4 x 3 = 12 புள்ளிகள்)

(02) 1) சமூகத்தில் அதிகரித்து வரும் சமூக விரோதச் செயல்கள் நான்கு தருக.

2) போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் விளைவுகள் நான்கு தருக.

3) சமூக விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த செயல்படுகின்ற நிறுவனங்கள் மூன்று தந்து அதில் ஒன்றின் செயற்பாடுகளை சுருக்கமாக கூறுக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

(03) 1) சட்டத்தின் மூலதாரங்கள் நான்கு தருக.

2) i) சட்டத்தின் இரு பிரிவுகளும் எவை?

ii) குற்றவியல் சட்டத்தினுள் அடங்கும் சமூக விரோத செயற்பாடுகள் இரண்டு தருக.

3) i) சட்டத்தை அமல்படுத்தும் இரண்டு நிறுவனங்கள் தருக.

ii) சட்டத்தைப் பேணும் பொலீசாரின் கடமைகள் இரண்டு தருக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

(04) 1) பிணக்கொன்றை இணக்க சபைக்கு கொண்டு செல்லும் இருமுறைகள் எவை?

1) ………………………………… 2) …………………………….

2) சிறுவர் பாதுகாப்பை மேம்படுத்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தனிநபர் உதவக்கூடிய சந்தர்ப்பங்கள் நான்கு தருக.

3) நீதிமன்றத்தின் செயல்பாடுகளிற்கு ஒத்துழைப்பு வழங்குதலில் உமது கடமை, பொறுப்புக்கள் நான்கு தருக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

(05) 1) ஆராய்ச்சி என்பதன் விளக்கம் யாது?

2) தொழில்நுட்பத்தை பயன்படுத்தக்கூடிய நான்கு சந்தர்ப்பங்களைத் தருக.

3) பேண்தகு அபிவிருத்தியில் பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக.

(4 x 3 = 12 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page